உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்.

மலர் 4. | காலயுத்திஞு வைகாசிமீ -1918ஞு மேமீ | இதழ் 5.

### திருநேரிசை.

கோவண முடுத்த வாறுங் கோளர வசைத்த வாறுந்
தீவணச் சாம்பல் பூசித் திருவுரு விருந்த வாறும்
பூவணக் கிழவ னாரைப் புலியுரி யரைய னாரை
ஏவணச் சிலையி னாரை யாவரே யெழுது வாரே.

---

## சிவஞான போதம்.

### நான்காஞ் சூத்திரம்.

### மூன்று மதிகரணம்.

(75-வது பக்கத்தொடர்ச்சி.)

### உதாரண வெண்பா.

இலாடத்தே சாக்கிரத்தை யெய்திய வுள்ள
மிலாடத்தே யைந்தவத்தை யெய்து—மிலாடத்தே
யவ்வவ விந்திரியத் தத்துறைகள் கண்டதுவே
யவ்வவற்றி னீங்கலது வாங்கு.

(இ-ள்.) இலாடத்தே சாக்கிரத்தை எய்திய உள்ளம் = இலாடத்தானத்தில் வந்து சாக்கிரத்தையடைந்த புருஷன் — (அஃதாவது சாக்கிரத்தானமாகிய இலாடத்திலிருந்து கீழ்நோக்கி, கண்டத்தையுற்றுச் சொப்பனவஸ்தையடைந்தும், இதயத்தையுற்றுச் சுழுத்தியவத்தையடைந்தும், உந்தியையுற்றுத் துரியாவத்தை யடைந்தும், மூலாதாரத்தையுற்று துரியாதீதாவத்தையடைந்தும், பின் மூலாதாரத்தினின்றும் மேல் நோக்கி முறையே அவ்வத்தானத்தில் துரியம் சுழுத்தி சொப்பனம் என்னும் அவத்தைகளை யடைந்து மீண்டும் இலாடத்தானத்தையுற்று சாக்கிராவத்தையை யடைந்த புருஷன்)-- இலாடத்தே ஐந்து அவத்தை எய்தும் = அவ்விலாடத்தானத்திலும் (சாக்கிரத்திற் சாக்கிரம், சாக்கிரத்திற் சொப்பனம், சாக்கிரத்திற்

சுழுத்தி, சாக்கிரத்திற்றுரியம், சாக்கிரத்திற் றுரியாதீதம் என்னும்) ஐந்து அவத்தைகளையடையும்.--இலாடத்தே அவ்வவ இந்திரியத்து அத்துறைகள் கண்டு = இலாடத்தானத்தில் (அவ்வாறு ஐந்து அவத்தைகளையடையும்போது) அவ்வப்பொறிகளால் அவ்வவ் விடயங்களை யுணர்ந்து—அதுவே = அப்போதே— அவ்வவற்றின் நீங்கல் = அவ்வவ்விடயங்களின் நீங்குதலாம்.--அது ஆங்கு = இனிவரும் சூத்திரங்களிற் கூறப்படும் சுத்தாவத்தையும் இவைபோல் நின்மல சாக்கிரம், நின்மல சொப்பனம், நின்மல சுழுத்தி, நின்மல துரியம், நின்மல துரியாதீதம் என ஐவகைப்படும். (எ-று.)

மேல்நோக்கிச் செல்லுங்கால் அவ்வத்தானத்தில் உண்டாகும் அவத்தைகட்கும், கீழ்நோக்கிச் செல்லுங்காற்படும் அவத்தைகட்கும் வேற்றுமையில்லாமையால் இவைகளை வகுத்துக்கூறுவதொழித்து "இலாடத்தே சாக்கிரத்தை யெய்திய வுள்ளம்" என்று கூறியருளினர்.

அவ்வவ இந்திரியம் = அவ்வத்தானத்தில் விடயித்தற்குறிய இந்திரியம்.
அவ்வவ்விடயம் = அங்கங்கே புலனுதற்குரிய விடயம்.

இலாடத்தானத்தில் அவ்வப்பொறிகளால் அவ்வவ்விடயங்களை யுணர்ந்து அவற்றின் நீங்குதலாவது, சாக்கிரத்திற் சாக்கிரமுதலிய ஐந்தவத்தையினும் ஆன்மா அந்தக்கரணங்கள் வாயிலாக அவ்வப் பொறிகளால் அவ்வவ்விஷயங்களை யுணர்ந்து அவ்வப்போது அவ்வவ்விஷயங்களினின்றும் நீங்குதல்.

ஆன்மாக்களுக்கு கேவலம் சகலம் சுத்தம் என்னும் மூன்று மூல அவத்தைகள் உண்டு. இவற்றுள் கேவலாவத்தையாவது, ஆன்மாக்கள் சர்வசங்காரகாலத்து சுத்தமாயா காரணத்திலே யொடுங்கிச் சிருட்டி காலமளவும் ஆணவ மலத்தால் மறைப்புண்டு கலையாதி தத்துவங்களோடுங் கூடாமல் அறிவும் செயலு மிழந்து கிடக்கும் நிலை. சகலாவத்தையாவது, சிருட்டி தொடங்கிச் சர்வ சங்காரமளவும் ஆன்மாக்கள் முப்பத்தாறு தத்துவங்களோடுகூடி எண்பத்து நான்கு நூறுயிரம் யோனிபேதங்களிலும் பிறந்திறந்துழலும் நிலை. சுத்தாவத்தையாவது, கேவல சகலாவத்தைகளை யடைந்து பிறந்திறந்து உழலும் அவசரத்தில் இருவினை யொப்பும் மலபரிபாகமுமடைந்து திருவருளோடு கூடியிருக்கும் நிலை.

ஆன்மா கேவலம் சகலம் சுத்தம் என்னும் மூலாவத்தை யொவ்வொன்றிலும் சாக்கிரமுதலிய ஐந்தவத்தைகளையும் அடையும்.

இம் முத்திறத் தைந்தவத்தைகளுள், ஆன்மா இலாடத்தான முதல் மூலாதாரம் வரையிலும் இருந்து சாக்கிரமுதல் துரியாதீத மீறான ஐந்தவத்தைகளைப் பொருந்தும் நிலை சகலத்திற் கேவலம் என்னப் படும். இலாடத்தானத்திலிருந்து சாக்கிரத்திற் சாக்கிரம் முதல் சாக்கிரத்திற் துரியாதீதம் வரையிலுமுள்ள ஐந்தவத்தைகளையடை யும் நிலை சகலத்திற் சகலம் என்னப்படும். நின்மல சாக்கிரம் முதல் நின்மல துரியாதீதம் வரையிலுமுள்ள ஐந்தவத்தைகளையடை யும்நிலை சகலத்திற் சுத்தம் என்னப்படும். இவை முறையே கீழா லவத்தை, மத்தியாவத்தை, நின்மலாவத்தை எனவும் படும்.

கீழாலவத்தையில் ஆன்மாவைக் கூடி நிற்கும் கருவிகள் இதற் குமுன் வெண்பாவுரையிற் கூறப்பட்டன.

மத்தியாவத்தையாகிய சாக்கிர சாக்கிரத்தில் சிவதத்துவ முதல் சுத்தவித்தியா தத்துவ மிறுதியாகிய ஐந்து கருவிகளும், சாக்கிர சொப்பனத்தில் சிவதத்துவமுதல் ஈசுரதத்துவம் இறுதி யாக நான்கு கருவிகளும், சாக்கிர சுழுத்தியில் சிவதத்துவமுதல் சாதாக்கிய தத்துவம் இறுதியாக மூன்று கருவிகளும், சாக்கிர துரியத்தில் சிவதத்துவம் சத்திதத்துவம் என்னும் இரண்டு கருவிகளும், சாக்கிரதுரியாதீதத்தில் சிவதத்துவம் என்னும் ஒரு கருவியும் கலாதிகளைச் செலுத்திநிற்கும்.

நின்மலாவத்தையுள், நின்மலசாக்கிரமாவது ஆசாரியராலே ஞானதீக்கைபெற்றுத் திரிபதார்த்த வுண்மையறிந்து சிந்தித்துத் தெளிந்து கருவிகள் நீங்க விசாரித்து நிற்பது. நின்மல சொப்பன மாவது கருவிகள் நீங்கியும் நீங்காமலும் நடுவே சற்றுப் பதைப் புண்டாவது. நின்மல சுழுத்தியாவது தத்துவநீங்கி மேலான கேவ லம் தானாய் நிற்பது. நின்மலதுரியமாவது கேவலம் நீங்கி அருளி னாலே தன்னையுங் கண்டு அருளையுங் கண்டு அவ் வசமாய் நிற்பது. நின்மல துரியாதீதமாவது சிவத்தைத் தரிசித்துச் சிவானந்தத் தழுந்துதல்.

## நான்காஞ் சூத்திரத் தொகைப்பொருள்.

இச்சூத்திரத்தால் ஆன்மா அந்தக்கரணங்களுள் ஒன்றன்று என்பதும், சகசமலத்தினால் உணர்வின்றி அவ்வந்தக்கரணங்களோடு கூடியறியும் என்பதும், அதனால் ஐந்தவத்தைப்படும் என்பதும் விளக்கப்பட்டன.

## சிவலிங்காசனாதி விவரண விளக்கம்.

(இது வித்வான் மயிலை - தணிகாசல முதலியாரவர்கள் எழுதி வைத்திருந்தது.)

மகாவிராட் புருடனுடைய பிரமரந்திரத்துக்குக் கீழ் எண்கலைகளும், பிரமரந்திரத்துக்குமேல் பன்னிரண்டு கலைகளுமாகிய இருபது கலாரூபமெனப்படுஞ் சுத்தமாயையே 'குடிலை' யெனவும், அக்குடிலைக்கு ஆதாரமாய் அதனை அதிட்டித்து நிற்பது 'பராசத்தி' யெனவும், அப்பராசத்தியை அபின்னமாகவும், குணமாகவும், அங்கமாகவுங் கொண்டிருப்பது "பரசிவம்" எனவும் வேதாகமங்கள் கூறும். குடிலையும், சத்தியும், சிவமும் ஆகிய மூன்றும் ஒன்று கூடியது சிவலிங்கம் ஆம். அச்சிவலிங்கம் ஆசனம், மூர்த்தி, மூர்த்திமான்களாகிய சிவக்குறியாம். இவற்றுள்,

### சிவர்சனவிலக்கணம்.

#### பொது.

பொதுவிலக்கண மெங்ஙனமெனில்,—பீடமும் இலிங்கமும் முறையே சத்தியும் சிவமும், விந்துவும் நாதமும் ஆம்.

பீடம் எனப்படும் ஆவுடையாளும் இலிங்கமு மென்னு மிரண்டுங் கூடிய சிவலிங்கமும், வர்ணம் ஐம்பத்தொன்றும் பதம் எண்பத்தொன்றும் மந்திரம் பதினொன்றும் கலை ஐந்தும் தத்துவம் முப்பத்தாறும் புவனம் இருநூற்றிருபத்துநான்கும் ஆகிய ஆறத்துவாவுங் கூடிய பேரண்டமும், சிற்றண்டமெனவும் பிண்டமெனவுங் கூறப்படுஞ் சரீரமும், ஆகிய இம்மூன்றும் சமமாயிருக்கும்.

இச்சிவலிங்கத்தின் கீழ்ப்பீடம் நகாரமும், நடுக்கண்டம் மகாரமும், மேற்பீடம் சிகாரமும், நாதக்குழி வகாரமும், இலிங்கம் யகாரமும் ஆகிய பஞ்சாக்கர ரூபம் ஆம். இன்னும்,

கீழ்ப்பீடம் அகாரமும், நடுக்கண்டம் உகாரமும், மேற்பீடம் மகாரமும், நாதக்குழி விந்துவும், இலிங்கம் நாதமும் ஆகிய ஓரெழுத் தொருமொழி யெனப்படும் பிரணவ ரூபம் ஆம். இன்னும்,

கீழ்ப்பீடம் நிவர்த்திகலையும், நடுக்கண்டம் பிரதிஷ்டாகலையும், மேற்பீடம் வித்தியாகலையும், நாதக்குழி சாந்திகலையும், இலிங்கம் சாந்தியாதீதக்கலையும் ஆகிய பஞ்சகலாசத்திரூபம் ஆம். இன்னும்,

கீழ்ப்பீடம் பிருதிவியும், நடுக்கண்டம் அப்புவும், மேற்பீடம் தேயுவும், நாதக்குழி வாயுவும், இலிங்கம் ஆகாயமும், ஆகிய பஞ்ச பூதப் பிரேரகர்களாகிய ஸ்ரீசதாசிவர், மகேச்சுவரர், உருத்திரர், விஷ்ணு, பிரமா வெனப்படும் காரணேசுவரர்களைவரின் பிரேரியங் களாகிய தன்மாத்திரைகளைந்தும், ஞானேந்திரியங்களைந்தும், கன் மேந்திரியங்களைந்தும், தூவாந்தக்கரணங்களைந்தும், கலாதி சூக்கு யாந்தக் கரணங்களைந்தும், பரமெனவும் அதிசூக்குமமெனவும்படும் நாதாதியைந்தும், ஏனையவை யெல்லாமுமாம்,

---

## சிவாசன விலக்கணம்.

### சிறப்பு.

பிருதிவிமுதல் குடிலை யீறுகக் கூறப்பட்டது ஒரு சிவலிங்க ரூபமாம். அது பெருமானுக்கு ஒரு மந்திர சிங்காசனமாம். இவ் வண்டத்தைத் தாங்கிய ஆதாரசத்தி சிவசத்தியேயாம். அநாசிருத வடிவிற் பிறந்திடும் அநந்தர் இவ்வாதாரசத்தியோடு கூடி அசுத்த மாயையைப் பிரேரித்துக் கொண்டிருப்பர், அவ்வாதார சத்தியும் அநந்தரும் அண்டத்தைப்போல் தாங்கப்பெற்ற சிவலிங்க ரூபமா கிய இம்மந்திராசனம் சாக்ஷாத் சிவபெருமான் எழுந்தருளியிருக் கும் பதுமாசனமாம்,

இப்பதுமாசனமாகிய விலிங்கத்தின் கீழ்ப்பீடம் அத்தாமரை யின் கிழங்கும், வீசமும், முளையுமாம். பீடத்தினடுக்கண்டம் அத் தாமரையின் கொடியாம். மேற்பீடத்தின் கீழ்ப்பாகம் தாமரை மலரினது புறவிதழாம், மேற்பக்கம் எட்டிதழ்த் தாமரைமலராம். மேற்பீடத்துக்கும் இலிங்கத்துக்கும் நடுவே இலிங்கத்தைச் சூழ்ந் திருக்கும் வடிவம் அம்மலரின் வரிகளாகிய கேசரங்களாம். இலிங் கம் அத்தாமரையின் காயாகிய கருணிகையாம். அவ்விலிங்கத்தின் மேற்பக்கத்தி னுள்வட்டம் விதைவட்டமாம்.

இவற்றினது உண்மை "அமல னிருந்தருளம்போ ருகத்தின்" என்னுஞ் சதாசிவரூபச் செய்யுளானுணர்க. அது வருமாறு.

சதாசிவன் எழுந்தருளியிருக்கும் பதுமாசனத்தின் கிழங்கு, பிரமாண்டமாகிய பிருதிவி தத்துவமாம். இதற்கிடம் ஆவுடையா ரின் கீழ்ப்பீடமாம்.

அத்தாமரையின் நாளமாகிய கொடி, அப்புதத்துவ முதல் கலாதத்துவ மீறுகிய இருபத்தொன்பது தத்துவமாம். இதற்கிடம்: ஆவுடையாளுடைய நடுக்கண்டமாம்.

அந்நாளத்தின் கண்டங்களாகிய முட்கள், அமரேசன் முதலிய புவனங்கள் எழுபத்திரண்டாம்.

அந்நாளத்தின் நூல் புத்திகுணமாகிய பஞ்சாசத்பாவமாம்.

புறவிதழ் மாயாதத்துவமாம். இதற்கிடம்: மேற்பீடத்தின் கீழ்ப்பாகமாம்.

உள்ளிதழ் சுத்தவித்தியாதத்துவமாம். இதற்கிடம்: ஆவுடையாளின் மேற்பீடமாம்.

கேசரங்களாகிய அல்லிகள் கலாசத்திகள் அறுபத்துநான்காம். இதற்கிடம்: மேற்பீடத்துக்கும் இலிங்கத்துக்கும் நடுவே இலிங்கத்தைச் சூழ்ந்திருக்கும் வடிவமாம்.

கர்ணிகையாகிய காய் குடிலையாம். இதற்கிடம்: முகிழிதமாகிய இலிங்கமாம்.

அத்தாமரைக்காயின் விதைகள் ஐம்பத்தோரக்ஷரமாம். இதற்கிடம் இலிங்கத்தின் மேற்பாகத்து உள்வட்டமாம்.

மேற்பீடவட்டமாகிய இதழ்வட்டமும், மேற்பீடத்துக்கும் இலிங்கத்துக்கும் நடுவே இலிங்கத்தைச் சூழ்ந்திருக்கும் வடிவமாகிய கேசரவடிவமும், இலிங்கத்தின் மேற்பக்கத்து வெளிவட்டமாகிய கர்ணிகைவட்டமும், இலிங்கநடுவில் உள்வட்டமாகிய விதைவட்டமும் என்னும் நான்கும் முறையே ஞானசத்தி, கிரியாசத்தி, இச்சாசத்தி, ஆதிசத்தி யென்னுஞ் சத்திகளால் வியாபிக்கப்பட்ட சூரியமண்டலம், சோமமண்டலம், அக்கினிமண்டலம், சத்திமண்டலம் என்னும் நான்கு மண்டலமாகக் கூறப்படும்.

---

## சிவமூர்த்தி இலக்கணம்.

இனிச் சிவமூர்த்தியாவது "திடமலி சாதாக் கியமுதற் சமனை முடிவாகச் சிவமூர்த்தி யாகும்" என்னும் வாக்கியப்படி, சாதாக்கிய கலைமுதல் சமனை கலையீறுகச் சொல்லுங் கலைகளாம்.

பரநாதம் பரவிந்துவே சிவமூர்த்தியென்றும், பஞ்சசத்திகளும் சமனையும் சிவமூர்த்தி யென்றும், அஷ்டத்ரிம்சத் கலாசத்தி

களே சிவமூர்த்தியென்றுங் கூறப்படும். அஃதெங்ஙனமெனில், பராசத்தியாதி பஞ்சசத்திகளெனப்படும் ஈசானியாதி பஞ்சசத்திகளின் அம்சங்களாகிய 5, 4, 8, 13, 8 ஆக 38 கலாசத்திகளே சுத்தமாயையின் காரியங்களாகிய பரநாதம் பரவிந்துவிற் றேன்றிய சாதாக்கிய கலைமுதற் சமனு கலையீருகச் சொல்லப்படும் சுத்த மாயாகலைகளை யதிட்டித்து நின்று, தர்மியாகிய பரசிவத்தையே தனக்குள் அந்தரியாமியாய் இருக்கப்பெற்ற தர்மமாகிய சதாசிவத்தின் மூர்த்தியாய் விளங்கக் கொள்ளுமென வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தங் கோஷிக்கு மென்மனுர் புலவர். இனி, சத்தியையே சரீரமாகக்கொண்ட சத்தனுகிய மூர்த்திமான் எனப்படும் பரசிவத்தின் உண்மை வருமாறு.—

---

## மூர்த்திமானிலக்கணம்.

இனி மூர்த்திமானுவது, சிவஞானசித்தியாரில்—

"சிவஞ்சத்தி நாதம் விந்து சதாசிவன் றிகழு மீசன்
உவந்தரு ளுருத்தி ரன்றான் மாலய னென்றி னென்றாய்
பவந்தரு மருவ நாலிங் குருவநா லுபய மொன்று
நவந்தரு பேத மேக நாதனே நடிப்ப னென்பர்."

என்று சொல்லியருளியபடி, ஒன்றினென்றாகத் தோன்றி, ஒவ்வொரு தத்துவங்களி னின்றுகொண்டு, தத்தந்தொழில்களைச் செய்யுஞ் சிவமுதல் அயனீருகிய முத்திரத் தொன்பது வர்க்கத்தினையுந் தனக்குத் தடத்தவிலக்கணமாகக்கொண்டு, அவற்றுள் வேற்றுமையின்றி நின்று அவ்வத் தொழில்களைச் செய்வோனுகிய சுத்தசிவனே யாம்.

அச்சுத்த சிவனாது சொரூபஇலக்கணங் கூறுங்கால், அது தத்துவப் பிரகாசத்தில்—

"உருவுமருவுங் கலப்புமா யன்றிக் குறியு
முறையுமுணர்ந் தறிவரிதாய்க் குணமெல்லை யிலதாய்
அருவமா யானந்தக் குறியா யற்புதமா
யணுமயமாய் நிராமயமா யசலமா யின்பமாய்த்
தெரிவரிதா யனுபவமாய்ச் சித்தசித்தா யணுவாய்ச்
செல்கதியாய்ப் பல்லுருவாய்த் தீமை நன்மையன்றா
யுரையிறந்துங் கரையிறந்து மொளியாகி வெளியா
யோங்குவது தற்சிவமென் றுங்குரைக்கு நூலே."

எனவும், சிவப்பிரகாசத்தில் "பலகலை" யெனவும் வரும் செய்யுட்களாலினிது விளங்கும். இப்பரசிவம் தரைமுதல் சமனையீருக வியாபித்திருக்கும் ஆசனமூர்த்தி மூலங்களை—"மேதினி முதலுயர் வித்தை வியாத்தி-யான சத்தி மண்டல மளவாத்-தீயன விலாத சிவாசன மாகுந்-திடமலி சாதாக் கியமுதற் சமனை - முடிவா கச்சிவ மூர்த்திய தாகும்-தரைமுதற் சமனை யளவு நிலாவிய-பரசிவ பூரண மூலமெனப்படும்."

என்னுஞ் சதாசிவரூபச் சூத்திரத்தானுணர்க.

சிவஞானசித்தியாரில்,—

"சத்தியுஞ் சிவமுமாய தன்மையிவ் வுலக மெல்லா
மொத்தொவ்வா வாணும் பெண்ணு முணர்குண குணியு மாகி
வைத்தன னவுளால் வந்த வாக்கமிவ் வாழ்க்கை யெல்லா
மித்தையு மறியார் பீட விலிங்கத்தி னியல்பு மோரார்"

என்னுஞ் செய்யுளால் தடத்த விலக்கணம் எனப்படும் பொதுவியல் பனைத்தும்,

"சிவனரு வுருவு மல்லன் சித்தினே டசித்து மல்லன்
பவமுதற் ரெழில்க ளொன்றும் பண்ணிடு வானு மல்லன்
றவமுத லியோக போகந் தரிப்பவ னல்லன் ருனே
யிவைபெற வியைந்து மொன்று மியைந்திடா வியல்பி னனே"

என்னுஞ் செய்யுளால் சொரூப விலக்கணம் எனப்படும் சிறப்பியல்புங் கூறப்பட்டன.

---

## பத்திரிகாசிரியர் முதலாயினோர் யாத்திரை.

அடுத்த மே மாதத்தில், பத்திரிகாசிரியர் இருக்கம் ஆதிமூலமுதலியாரும், திருவோத்தூர் திருநாவுக்கரசு சுவாமிகள் மடம் ஸ்ரீமத் - ம - தி - பானுகவிசுவாமிகள், சென்னை முத்தியாலுப்பேட்டை ஹைஸ்கூல் தமிழ்த் தலைமைப் பண்டிதர் ஸ்ரீமான் மணிமங்கலம் திருநாவுக்கரசு முதலியாரவர்கள் முதலிய சிலரும், திரு இராமேச்சுரம் வரையில் யாத்திரைசெய்து சிற்சில சிவதலங்களைத் தரிசிக்கவும், ஆங்காங்கு சைவ சமயத்தின் மேன்மையையும், அதின் தற்கால நிலைமையையும், நம்மவர்களின் கடமையையும் விளக்கி உபநியாசங்கள் செய்யவும், இவ்விஷயமாகப்பல சைவாபிமான சீலர்களிடம் நேரிற் பேசவும் உத்தேசித்திருக்கிருர்கள்.

# சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின்

## (1917ஆம்)

## 19 ஆவது வருடத்துச் சபாக்கிரந்தம்.

---

மதிவளர் சடைமுடி மன்றுளா ரைமுன்
றுதிசெயு நாயன்மார் தூய சொன்மலர்
பொதிநல னுகர்தரு புனிதர் பேரவை
விதிமுறை யுலகினில் விளங்கி வெல்கவே.

---

### முன்வருடத்து மகாஜனக்கூட்டம்.

இத் திருக்கூட்டத்தின் 18ஆம் வருடத்து மகாஜனக்கூட்டம், 1917ஆம் மார்ச்மீ 4உ இதின் சபா மண்டபத்தில், ஸ்ரீமான், திவான் பஹதூர் P. இராஜரத்தின முதலியாரவர்கள் அக்கிராசனம் வகிக்க நடைபெற்றது. அதின் விருத்தாந்தம் 1917ஆம் ஏப்ரல்மீ வெளிவந்த சைவப் பத்திரிகையில் வெளியிடப்பட்டது.

### மகாசபை.

| | |
|---|---|
| இந்த மகாசபையில் 1917ஆம் ஆரம்பத்தி லிருந்தவர்களின் தொகை. | 51 |
| 1917ஆம் புதிதாய்ச் சேர்ந்தவர்கள். | 2 |
| ஷை நீங்கினவர்கள். | 7 |
| ஷை முடிவிலிருந்தவர்கள். | 46 |

இவர்கள் பெயர் முதலியன இதின் ஈற்றில் காட்டப்பட்டுள்ளன. இத்திருக்கூட்டத்தவர்களுள் (Retired Deputy Collector) C. வெங்குபிள்ளையவர்களும், Caxton Press Proprietor, C. கன்னைய நாயுடு அவர்களும், மனோன்மணிவிலாச அச்சுக்கூடத்ததிபர் K. லோகநாத முதலியாரவர்களும், திருவல்லிக்கேணி மளிகை

வர்த்தகர் சுப்பராய நாயகரவர்களும், கடந்த வருடத்தில் சிவ பெருமான் திருவடி நீழலை யடைந்தார்கள்.

சென்ற வருடாந்தக் கூட்டத்திற் செய்த தீர்மானத்தின்படி நிர்வாகசபையார் வேண்டுகோளுக் கிசைந்து, ஸ்ரீமான் மாசிலா மணிப்பிள்ளையவர்கள் B. A., B. L., Official Referee, High Court, இச்சபையின் போஷகருள் ஒருவராயிருந்து வருகின்றார்கள்.

| | | ரூபா. |
|---|---|---|
| இச்சபையார் 1916ஸு கொடுத்த மாதசந்தா | | 299 |
| ஷை 1917ஸு | ஷை | 268 |

## The Saivite Elementary School
எனப் பெயரிய
### சைவ பாடசாலை.

இப்பாடசாலையில் 1916 வது வருடத்திலிருந்தது போலவே, 1917 வது வருடத்திலும் பாலர் வகுப்பு முதல் நான்காம் வகுப்பு வரையில் 5 வகுப்புகளிருந்தன. மூன்று உபாத்தியாயர்களால் தமிழும் ஆங்கிலமும் சைவசமய பாடங்களும் கற்பிக்கப்பட்டன.

| | |
|---|---|
| இதில் சென்ற வருட ஆரம்பத்தில் இருந்த சிறுவர்களின் தொகை | 74 |
| இடையில் சேர்ந்தவர்கள் | 61 |
| இடையில் நீங்கினவர்கள் | 57 |
| சென்ற வருட முடிவில் இருந்தவர்கள். | 78 |

| | | | |
|---|---|---|---|
| 1916ஸு | பிள்ளைகள் கொடுத்த சம்பளம் | ரூபா | 180 |
| 1917ஸு | ஷை | ,, | 199 |
| 1916ஸு | அரசாங்கத்தார் உபகரித்த தொகை | ரூபா | 172 |
| 1917ஸு | ஷை | ,, | 203 |
| 1916ஸு | பாடசாலைக்குச் செலவான தொகை | ரூபா | 479 |
| 1917ஸு | ஷை | ,, | 527 |

1917ஹு சிலமாதம் வரையில் உபாத்தியாயர் பரீட்சையில் தேறிய மற்றொரு உபாத்தியாயரையும், ஒரு சேவகனையும் நியமித்திருந்தமையால் அவ்வருடம் செலவு சிறிது அதிகரிக்க நேர்ந்தது.

இடவசதிக் குறைவால் சென்ற வருடம் அதிக பிள்ளைகளைச் சேர்த்துக்கொள்ளக் கூடாமற்போயிற்று.

இப்பாடசாலை 1917ஹு சூலைமீ 10உ அரசாங்கப் பாடசாலைகளின் உதவிப் பரிசோதகரால் பரிசோதிக்கப்பட்டது.

முன்வருடப் பரீட்சையில் தேர்ந்த சிறுவர்களுக்கு, 1917ஹு மார்ச்மீ 4உ கூடிய மகாஜனக்கூட்டத்தில், புத்தகப் பரிசுகள் அளிக்கப்பட்டன: அப்போது பரிசளித்தற்குவேண்டிய புத்தகங்கள் பலவும் மாதர் காலாசாலைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான் கா. ரா. நமசிவாயமுதலியாரவர்களாலும், கவர்ன்மெண்டு பென்ஷனர் ஸ்ரீமான் மயிலை முருகேசமுதலியார் அவர்களாலும் இலவசமாய் கொடுக்கப்பட்டன.

இச்சபையின் போஷகருள் ஒருவரும், Messrs. Best & Co, துவிபாஷிகருமாகிய ஸ்ரீமான் யஸ். இரத்தினவேல் செட்டியாரவர்கள், 1917ஹு சூன்மீ இப்பாடசாலைக்காக ஒருகட்டடம் வாங்கிவிட்டார்கள். அதனால் இச்சபையார் மாதந்தோறும் கொடுத்துக் கொண்டிருந்த பாடசாலை வாடகை ரூபா பத்து மீதியாயிற்று. செட்டியாரவர்கள் பாடசாலைக்குக் கட்டடம் வாங்கிவிட்டதுமல்லாமல் அது கட்டப்பட்டிருக்கும்நிலத்திற்கும் மாதந்தோறும் 6 ரூபா வாடகையும் கொடுத்துவருகின்றார்கள். ஷை கட்டடத்தை இப்போது விசாலமாகக் கட்டத்தொடங்கியுள்ளார்கள்.

## சைவம்.

1916 ஆவது வருடத்தில் சைவம் என்னும் பத்திரிகைக்குச் சந்தாதாரர்களா யிருந்தவர்களின் தொகை (ஆயுள் சந்தாதாரர்கள் நீங்கலாக) 780

1917ஹு ஷை ஷை 810

1916ஹு சேர்ந்திருந்த ஆயுள் சந்தாதாரர்கள் 108

1917ஹு சேர்ந்த ஷை ஷை 81

ஆக கடந்த வருடம் வரையில் சேர்ந்திருந்த ஆயுள் சந்தாதாரர்கள் 189

இவர்களுள் 147 ஆயுள் சந்தாதாரர்கள் இரங்கோனிலிருந்து ஸ்ரீமான் மெ-செ-மெ-மெ- இராமநாதன் செட்டியாரவர்களாலும், ஸ்ரீமான் செவு-சித-சொக்கலிங்கச் செட்டியாரவர்களாலும் சேர்க்கப்பெற்றவர்கள். 25 ஆயுள் சந்தாதாரர்கள் ஸ்ரீமான் S. R. M. S. சதாசிவச் செட்டியாரவர்களால் சேர்க்கப்பெற்றவர்கள்.

இவர்களுள் கீழேகாட்டிய அறுவர் நீங்கலாக ஏனையோருடைய பெயர் முதலியன இதற்குமுன் வெளிவந்த பத்திரிகைகளில் காட்டப்பட்டுள்ளன.

1. அரு-ஆ-இலட்சுமணன் செட்டியாரவர்கள் (நா-லெ-அளகாபுரி) 85 மொகல் வீதி ரங்கோன்.

2. சுப-கண-உலகப்ப செட்டியாரவர்கள் (செ-கண-ராம-உல-ஒக்கூர்) 85 மொகல் வீதி ரங்கூன்.

3. சி-கரு-சி-சித-சோமசுந்தரம் செட்டியாரவர்கள் (உல-க-க-நா-சக்கந்தி) 85 மொகல் வீதி ரங்கோன்.

4. சுப-க-அ-அ-மு-வேலாயுதஞ் செட்டியாரவர்கள் (செவு-கி-வெ-நாட்டரசன்கோட்டை) 6 மொகல் வீதி ரங்கோன்.

5. N. A. S. சண்முகம் செட்டியாரவர்கள், பூந்தட்டான் செட்டி சாமில் ரங்கோன்.

6. நா-முரு-நாராயணன் செட்டியாரவர்கள் சி-மெ-வீதி புதூர், காரைக்குடி.

| | | | | |
|---|---|---|---|---|
| 1916 ஆவது வருடத்தில் இப்பத்திரிகையின் வரவு (ஆயுள் சந்தா நீங்கலாக) | | | ரூபா | 717 |
| 1917 | ஷை | ஷை | ,, | 817 |

| | | | | |
|---|---|---|---|---|
| 1916ஷ் இப்பத்திரிகையின் பொருட்டுச் செலவான தொகை | | | ரூபா | 521 |
| 1917ஷ் | ஷை | ஷை | | 928 |

1915, 1916ஆம் வருடங்களிற் செய்யப்பட்டமை போலவே கடந்த 1917ஆம் வருடத்திலும் வேறு சிப்பந்திகளின்றி சகல காரியங்களும் பத்திரிகாசிரியராலேயே நடத்தப்பட்டன. சென்ற வருடம் ஜுன்மீ முதல் சைவப்பத்திரிகை இச்சபையாரால் புதிதாகத் தாபிக்கப்பட்ட வைதிக சைவ அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டு வருகின்றது.

முதலில் 16 பக்கங்களோடு வெளிவந்த இப்பத்திரிகை சென்றவருட மத்தியிலிருந்து 24 பக்கங்களோடு வெளிவருகின்றது. காகிதப்பஞ்சம் நாளுக்கு நாள் மிகவும் அதிகப்பட்டுவந்தும், அதனால் சோர்வுறாமல் இச்சபையார் இன்னும் உயர்ந்த காகிதத்திலேயே பத்திரிகையை அச்சிட்டுவருகின்றார்கள்.

## வைதிக சைவ அச்சுக்கூடம்.

இவ்வச்சுக்கூடம் 1917 ஸு ஜூன் மீ முதல் சென்னை பாளையப்பன்வீதி 43வது எண்ணுள்ள வீட்டில் தாபிக்கப்பட்டு நடந்து வருகின்றது. இதன்பொருட்டு முதலில் ஒருடெம்மி அச்சியந்திரமும் சிலமரசாமான்களும் M. K. N. ஆறுமுகம் கம்பெனியில் 340 ரூபாவுக்கு வாங்கப்பட்டன. பிறகு கவர்ன்மெண்டு அச்சுக்கூடத்தில் ஒரு ராயல்அச்சியந்திரமும். சிலபித்தளைச்சாமான்களும் மரசாமான்களும் 370 ரூபாவுக்கு ஏலத்தில் வாங்கப்பட்டன. இவையன்றி புதிய அச்சுகளும் இன்னும் சிலசாமான்களும் 340 ரூபாவுக்கு வாங்கப்பட்டுள்ளன. இப்போது அச்சுக்கூடத்திலிருக்கும் யந்திரங்கள் முதலிய சகலசாமான்களின் மதிப்பு சுமார் 1050.

காகிதப்பஞ்சத்தால்:கடந்தவருடத்தில் சைவப்பத்திரிகை சம்பந்தமான வேலைகள் தவிர வேறுவேலைகள் இதிற் செய்யப்படவில்லை. வேறுவேலைகள் செய்யப்படாவிடினும் சைவம் முதன் மலரை மீண்டும் அச்சிட்டு வந்ததனாலும், முதன் மலரிலுள்ள ஞானப்பிரகாச சம்பாஷணையைத் தனியாய் எடுத்து அச்சிட்டமையாலும்,சந்தாதாரர்களின் விலாசங்களையும் மற்றும் சபைக்கு வேண்டிய கடிதங்கள் முதலியவற்றையும் அச்சிட்டதனாலும், இவ்வச்சுக்கூடத்திற்குச் சென்றவருடத்தில் போதிய வேலையிருந்தது.

## சிவஞானமுனிவர் புத்தகசாலை.

இப்புத்தக சாலைக்கு திருவாவடுதுறை யாதீனச் சைவப்பிரசாரகர் ஸ்ரீமான் தூத்துக்குடி பொ-முத்தையாபிள்ளையவர்கள் தாம் வெளியிட்ட "சிவஞானசித்தியார் சுபக்கம் மூலமும் பொழிப்புரையும்," "சிவஞானபோதச் சிற்றுரைவிளக்கமும், ஸ்ரீமான் சி. ஏகாம்பரமுதலியாரவர்கள் "தேவாரம் வேதசாரம்" என்னும் நூலும், ஸ்ரீமான் கயப்பாக்கம். சதாசிவசெட்டியார் B. A. அவர்கள் சிவகீதையின் ஒருபகுதியும், "திராவிட வேதத்திரட்டும் ஸ்தலமான்மியச்சுருக்கமும்" நன்கொடையாகக் கொடுத்தார்கள்.

## இந்து சன்மார்க்க சபை.

தென் ஆப்பிரிக்கா புலோவேயாவில் தாபிக்கப்பெற்றிருக்கும் இத்திருக்கூட்டத்தின் கிளைச்சபையினராகிய இந்து சன்மார்க்க சபையார் சென்றவருடத்தில் 25 ரூபாவும், நிகழும் 1918ஷ ஜனவரி மீ ரூபா. 8-13-0ம் நன்கொடையாக அனுப்பினார்கள். இக்கிளைச்சபையின் முதல் வருடாந்தக்கூட்டத்தின் சபாக்கிரந்தமும் வரவுசெலவுகணக்கும் அவர்கள் விருப்பத்தின்படி சைவம் 4-வது மலர் முதலாமிதழில் வெளியிடப்பட்டன.

## வரவு செலவுக் கணக்கு.

சென்றவருடத்து வரவு செலவுக்கணக்கு இச்சபையினருள் ஒருவராகிய ஸ்ரீமான்-சு- சபாபதிமுதலியாரவர்களால் பரிசோதிக்கப்பெற்று இதினீற்றில் சேர்க்கப்பெற்றுள்ளது.

## திருமுறை மகோற்சவம்.

வருடந்தோறும் செய்துவரும் வழக்கப்படி, இத்திருக்கூட்டத்தாரும், முத்தியாலுப்பேட்டை உமாமகேசுவரர் தமிழ்வேத பாராயண பக்தஜன சபையாருங்கூடி 1917ஷ நவம்பர்மீ 7-உ திருமுறை மகோற்சவம் கொண்டாடி முத்தியாலுபேட்டையிலிருந்து குளேவரையிற்போய் திருவண்ணமலைக்குச் செல்லும் ஞானதீபக்குடையை யாராதனைசெய்தார்கள். தரிசனார்த்தமாகச் சென்ற சிவனடியார்களுக்கு கவுணியன் அச்சுக்கூடத் தலைவர் ஸ்ரீமான் கா. முருகேசச்செட்டியாரவர்கள் மாகேசுர பூசைநடத்தினார்கள்.

## வந்தனம்.

தம்மாலியன்ற அளவு பலவழிகளிலும் உண்மையாகவும், ஒழுங்காகவும் சைவசமய பரிபாலனஞ்செய்யும் இத்திருக்கூட்டத்தாரும் இவர்களுக்கு உதவிபுரிந்துவரும் போஷகர்களும் அபிமானிகளும் மற்றுமுள்ளாரும் ஸ்ரீ நடராஜப்பெருமானார் திருவருளால் சகலஐசுவரியமும் பெற்று நீடூழிவாழுமாறு அவ்விறைவர் திருவடிகளைத் தியானிக்கின்றோம்.

இங்ஙனம்,
உத்திரவின்படி,
இ. ஆதிமூலமுதலியார்,
காரியதரிசி.

## சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின்

### 1917ஆ வரவு செலவுக் கணக்கு.

| வரவு. | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| 1917ஆ ஜனவரிமீ 1௳ இருப்பு | 1097 | 14 | 8 |
| மகாசபையார் மாதச்சந்தா | 267 | 8 | 0 |
| சைவப் பத்திரிகையின் வருடச்சந்தாவும் முன் வருடப் பத்திரிகை விற்பனையும் | 803 | 14 | 0 |
| சைவப் பத்திரிகையின் ஆயுள் சந்தா | 760 | 0 | 0 |
| விளம்பர வரவு | 12 | 12 | 0 |
| பாடசாலை பிள்ளைகள் சம்பளம் | 199 | 7 | 0 |
| ஷை அரசாங்கத்தார் உதவி | 203 | 0 | 0 |
| சேவிங்ஸ் பாங்கு வட்டி | 12 | 4 | 5 |
| ஆப்பிரிக்கா இந்து சன்மார்க்கசபையின் நன்கொடை | 25 | 0 | 0 |
| சுப்பிரமணியம் பாடசாலையில் சமய போதனை செய்ததற்கு | 33 | 12 | 6 |
| நாநாவித சில்லரை வரவு | 14 | 10 | 6 |
| ஆக மொத்த வரவு. | 3430 | 3 | 1 |
| அடுத்த பக்கத்திற் காட்டியபடி மொத்த செலவு | 3012 | 5 | 7 |
| 1917ஆ டிசம்பர்மீ 31௳ இருப்பு. | 417 | 13 | 6 |

## 1917௵ வரவு செலவுக் கணக்கு.

| செலவு. | ரூ. | அ. | ப. | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| **சைவப் பத்திரிகை.** | | | | | | |
| காகிதம் (முதல் மலரின் இதழ்கள் சிலவற்றை இரண்டாமுறை அச்சிட்டதற்கு வாங்கிய காகிதத்தின் விலை உட்பட) | 574 | 1 | 10 | | | |
| அச்சுக் கூலி | 56 | 12 | 0 | | | |
| தபாற்செலவு | 263 | 4 | 6 | | | |
| தைத்தல் முதலியவற்றின் பொருட்டு நேர்ந்த செலவுகள் | 33 | 8 | 11 | 927 | 11 | 3 |
| **பாடசாலை.** | | | | | | |
| உபாத்தியாயர்கள் சம்பளம் | 389 | 1 | 3 | | | |
| வாடகை | 57 | 0 | 0 | | | |
| வேலைக்காரர் | 48 | 0 | 0 | | | |
| ரிஜிஸ்டர் புத்தகங்கள் மை காகிதம் முதலியவைகளுக்கு | 32 | 13 | 7 | 526 | 14 | 10 |
| **அச்சுக்கூடம்.** | | | | | | |
| யந்திரங்களும், அச்சுகளும், பித்தளை இரும்பு மரசாமான்களும் | 1051 | 4 | 1 | | | |
| வீட்டுவாடகை | 33 | 9 | 3 | | | |
| சிப்பந்திகள் | 166 | 0 | 2 | | | |
| மை வச்சிரம் வண்டிசத்தம் முதலிய பல சில்லரை செலவுகள் | 62 | 9 | 7 | 1313 | 7 | 1 |
| தண்டற்காரர்சம்பளம் | | | | 40 | 0 | 0 |
| கடன் | | | | 38 | 11 | 7 |
| காரியதரிசிக்கு லிகிதர் செலவு | | | | 97 | 14 | 10 |
| ஞானப்பிரகாச சம்பாஷணை யச்சிட்டதற்கு வாங்கின காகிதம் | | | | 44 | 2 | 0 |
| திருமுறை உற்சவம், வருடோற்சவம் வண்டிச் சத்தம் முதலிய சில்லரை, செலவுகள். | | | | 23 | 8 | 0 |
| ஆகமொத்த செலவு | | | | 3012 | 5 | 7 |

கணிதபரிசோதகர் — காரியதரிசி

சு. சபாபதி முதலியார். — இ. ஆதிமூல முதலியார்.

# சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின்

## போஷகர்கள்.

ஸ்ரீமான் எஸ். இரத்தினவேல்செட்டியாரவர்கள்
துவிபாஷிகர், மெஸ்ஸர்ஸ் பெஸ்ட் அண்டு கோ.

,, ராவ்சாஹிப் பி. மாசிலாமணிமுதலியாரவர்கள்
இஞ்ஜினீரிங் கண்ட்ராக்டர்.

,, ராவ்பஹதூர் கே. வைத்தியலிங்கம்பிள்ளையவர்கள்
ப்ரெஸிடென்ஸி போஸ்ட்மாஸ்டர்.

,, வி. முத்தையாபிள்ளையவர்கள்
வர்த்தகர், பெரியண்ணமுதலிவீதி சென்னை.

,, ஆர். காசிவிசுவநாதமுதலியாரவர்கள்
பொடி புகையிலை வர்த்தகர், சென்னை.

,, திரு. சபாபதிமுதலியாரவர்கள்
ரிடைர்ட் சப் இஞ்ஜினீர், தங்கசாலைவீதி, சென்னை.

,, வி. மாசிலாமணிப்பிள்ளையவர்கள் B. A. B. L.
ஐகோர்ட்டு.

---

## நிர்வாக சபையார்.

### சபைத்தலைவர்.

ஸ்ரீமான் ச. இராஜாகண்ணுமுதலியாரவர்கள் பி. ஏ.
சூபரிண்டெண்டெண்டு, அக்கவுண்டாண்டு ஜனரல் ஆபீஸ்

### உதவிசபைத்தலைவர்.

,, தி. த. கனகசுந்தரம்பிள்ளையவர்கள் பி. ஏ.
சூபரிண்டெண்டெண்டு, வர்ணகுலர் ஸ்டடீஸ்
மதராஸ் கிறிஸ்டியன் காலேஜ்.

### காரியதரிசி.

,, இ. ஆதிமூல முதலியாரவர்கள், கவர்ன்மெண்டு
பென்ஷனர்.

### உதவிகாரியதரிசி.

,, பி. ஸி. சமரபுரிமுதலியாரவர்கள்
கிளார்க்கு, ரெயில்வே ஆடிட் ஆபீஸ்.

## பாடசாலை காரியதரிசி (கரேஸ்பாண்டெண்டு.)

ஸ்ரீமான் மணி. திருஞானசம்பந்தமுதலியாரவர்கள்
கிளார்க்கு, ரெயில்வே ஆடிட் ஆபீஸ்.

## அத்தியட்சர்கள்.

,, திரு. சபாபதி முதலியாரவர்கள், ரிடைர்ட் ஸப் இஞ்ஜினீர்.
,, யஸ். விநாயக முதலியாரவர்கள் பி. ஏ.
சூபரிண்டெண்டெண்டு, அக்கவுண்டாண்டு
ஜெனரல் ஆபீஸ்.
,, மணி. திருநாவுக்கரசு முதலியாரவர்கள்
முத்தியாலுப்பேட்டை ஹைஸ்கூல் தமிழ்த்
தலைமைப் பண்டிதர்.
,, பா. கண்ணப்ப முதலியாரவர்கள்
கிளார்க்கு, ரிவினியு போர்டு ஆபீஸ்.
,, ஆர். துரைசாமிமுதலியாரவர்கள், கிளார்க்கு,
மதராஸ் ரெயில்வே கொஆபரேடிவ் ஸ்டோர்ஸ்.
,, ஆர். பி. துரைசாமி முதலியாரவர்கள்
கவர்ன்மெண்டு பென்ஷனர்.
,, வா. தி. கோவிந்தராஜமுதலியாரவர்கள்
கிளார்க்கு, ரிஜிஸ்ட்ரார் ஆப் கோஆபரேடிவ் க்ரெடிட்
ஸொஸைட்டீஸ் ஆபீஸ்.

## கணிதபரிசோதகர்.

ஸ்ரீமான் சு. சபாபதி முதலியாரவர்கள்.

---

## சாமாசிகர் (அங்கத்தினர்.)

ஸ்ரீமான், மி. பார்த்தசாரதி நாயுடு அவர்கள் ஜெயராம முதலியா
ரவர்கள், வாழைப்பழக் கிடங்கு.
,, கா. ரா. நமசிவாய முதலியாரவர்கள், தமிழ்ப்பண்டிதர்.
,, பி. லோகநாதமுதலியாரவர்கள், கண்ட்ராக்டர்.
,, மயிலை. முருகேச முதலியாரவர்கள், கவர்ன்மெண்டு
பென்ஷனர்.

ஸ்ரீமான், பெ. சபாபதிமுதலியாரவர்கள், மணிலாகிடங்கு.
,, கே. சிவசங்கர முதலியாரவர்கள், டெலிகிராப் ஆபீஸ்.
,, எஸ். டி. சமரபுரி முதலியாரவர்கள், ஷிப்பிங் அண்டு க்ளியரிங் ஏஜெண்டு.
,, ஆர். விசுவநாதம் செட்டியாரவர்கள், வர்த்தகர்.
,, கு. அ. ற. சுப்பராய செட்டியாரவர்கள், ஒற்றைவாடை அரிசிமண்டி.
,, கோ. கணேசம், நீலகிரி, கோடப்பமந்து காப்பிவர்த்தகர்.
,, கோ. ஆறுமுகமேஸ்திரியவர்கள், ஷை
,, கோ. சக்கிரபாணிமுதலியாரவர்கள், அப்பா அண்டு கோ.
,, க. தே. சபாபதி செட்டியாரவர்கள், ஒற்றைவாடை அரிசிமண்டி.
,, பொ. அரங்கநாதமுதலியாரவர்கள், ஹோ அண்டு கோ.
,, தி. சுப்பராயநாயகரவர்கள், வர்த்தகர் திருவல்லிக்கேணி.
,, அ. சிங்காரவேலு செட்டியாரவர்கள், திருவல்லிக்கேணி.
,, பெங்களூர்-நாகரத்தினம் அம்மாள் அவர்கள், சங்கீதபண்டிதை.
,, ம. மு. கோவிந்தராஜசெட்டியாரவர்கள், திருவல்லிக்கேணி அரிசிமண்டி.
,, வி. எஸ். தெய்வசிகாமணி முதலியாரவர்கள், கிளார்க்கு எம். அண்டு எஸ். எம். ரெயில்வே இராயபுரம்.
,, பார்த்தசாரதி முதலியாரவர்கள், வெற்றிலை வர்த்தகர்.
,, எஸ். சமரபுரிச் செட்டியாரவர்கள், மானேஜர், பெஸ்டு அண்டுகோ ஆயல்மில்.
,, சி. பா. கங்காதர முதலியாரவர்கள், ஜவளி; பொடிவியாபாரம்.
,, பி. எம். முருகேச முதலியாரவர்கள், காக்ஸ்டன் அச்சுக்கூடம்.
,, கூ. சிவவாசுதேவ முதலியாரவர்கள். அக்கவுண்டண்டு, எம். அண்டு. எஸ். எம். ரெயில்வே.
,, சி. கன்னையநாயுடு அவர்கள், காக்ஸ்டன்அச்சுக்கூட அதிபர்

ஸ்ரீமான் எம். நடேசமுதலியாரவர்கள்,
காா்ப்பொரேஷன் ஓவர்சியர்.

,, ஜி. முருகேசமுதலியாரவர்கள், கிளார்க்கு,
மெக்டவல் கம்பெனி.

,, எம். இராமலிங்கமுதலியாரவர்கள்,
வர்த்தகர் கொண்டிதோப்பு.

,, டி. வி. குப்புசாமிமுதலியாரவர்கள்,
ஷராப், தாலுக்கா ஆபீசு.

" வி. எஸ். பவானந்தம்பிள்ளையவர்கள்,
5 ரெயில்ரோட் பெங்களூர்.

,, கே. லோகநாதமுதலியாரவர்கள், அச்சுக்கூடத்தலைவர்,
வைத்தியநாதமுதலி வீதி.

,, முத்துசாமி முதலியாரவர்கள்,
மதராஸ் பாங்கி முருகேசமுதலியார் குமாரர்.

,, வி. நாராயணசாமி முதலியாரவர்கள்,
கிளார்க்கு போர்ட் ட்ரஸ்டு ஆபீஸ்.

,, வெங்குபிள்ளையவர்கள், ரிடைர்ட் டிப்டி கலெக்டர்.

---

## பிருஹஜ் ஜாபாலோபநிஷத்து.

### பஸ்மவைபவம்.

1. தத்ரைதே ஸ்லோகாபவந்தி தேனாதீதம் ஸ்ருதம்தேன தேனஸர்வ
மனுஷ்டிதம் ஏன விப்ரேணசிரஸி த்ரிபுண்ட்ரம் பஸ்மநாத்ருதம். [

(இ-ள்.) எந்தப் பிராம்ஹணனால் சிரஸ்ஸில் பஸ்மத்தினால் திரிபுண்டரதாரணஞ் செய்யப்பட்டதோ, அவனால், ஸர்வமும் அத்தியயநஞ் செய்யப்பட்டனவாம். ஸர்வமுஞ் சிரவணஞ்செய்யப்பட்டனவாம். ஸர்வமும் அநுஷ்டிக்கப்பட்டனவா மென்றறிக.

2. த்யக்தவர்ணாஸ்ர மாசாரோ லுப்தஸர்வ க்ரியோபியஃ
ஸக்ருத்திர்யக் த்ரிபுண்ட்ராங்க தாரணாத்ஸோபி பூஜ்யதே.

(இ-ள்.) வர்ணாச்சிரமாசாரங்களைக் கைவிட்டவனும், சர்வசத்கிரியைகளும் லோபித்தவனுமானாலும் ஒருதரந்திரியக் புண்டரத்தைத் தரித்தமாத்திரத்திற் பூஜ்யனாய் விடுகிறான் என்பதாம்.

3. ஏபஸ்மதாரணம் த்யக்த்வா கர்மகுர்வந்தி மானவாః
தேஷாந்நா ஸ்த்யபிவா மோக்ஷஸ் ஸம்ஸாராஜ் ஜன்மகோடிபிః.

(இ-ள்.) எவர்களானல் பஸ்மதாரணத்தைத் தள்ளிக் கர்மங்களைச் செய்கிறார்களோ, அவர்களுக்குக் கோடிஜன்மமெடுத்தாலும் ஸம்ஸாரதுக்கந்தாண்டி மோக்ஷமடையும்வழி கிடையாது என்பதாம்.

4. மஹாபாதக யுக்தாநாம் பூர்வஜன்மார்ஜி தாகஸாம்
த்ரிபுண்ட்ரோத் தூளனேத்வேஷோ ஜாயதே ஸுத்ருடம் புதாః.

(இ-ள்.) இந்தஜன்மத்தில் மஹாபாதகங்களுடன் கூடினவர்களும், பூர்வஜந்மங்களில் சம்பாதித்த பாவங்களுள்ளவர்களுமான பதிதர்களுக்கே திரிபுண்டரத்திலும், உத்தூளனத்திலும் பலமான துவேஷமுண்டாகும். ஹேவித்வான்களே அறிமின்களென்றபடியாம்.

5. ஏஷாம் கோபோபவேத் ப்ரம்ஹம் லலாடே பஸ்மதர்ஸநாத்
தேஷாமுத்பத்தி ஸாம்கர்ய மனமேயம் விபஸ்சிதா.

(இ-ள்.) எவர்களுக்கு அன்னியனுடைய நெற்றியில் பஸ்மத்தைக் கண்டமாத்திரத்தில் கோபமுண்டாகிறதோ, அவர்கள் பலர்க்குப் பிறந்தவர்களென்று வித்வான்களறியத்தக்கது என்பதாம்.

6. ஏஷாந்நாஸ்தி முனேஸ்ரத்தா ஸ்ரௌதே பஸ்மனிஸர்வதா
கர்ப்பாதானனி ஸம்ஸ்கார ஸ்தேஷான்னஸ்தி நிஸ்சயః.

(இ-ள்.) ஹேமுனியே! எவர்களுக்குச் சுருதியிற் சொல்லிய பஸ்மத்தி லெப்பொழுதுஞ் சிரத்தையில்லையோ, அவர்களுக்குக் கர்ப்பாதான முதலான ஸம்ஸ்காரங்கள் நடக்கவில்லையென்று நிச்சயிக்கவேண்டியது என்பதாம்.

7. ஏபஸ்மதாரிணம் த்ருஷ்ட்வாநராః குர்வந்தி தாடனம்
தேஷாம் சண்டாளதோஜன்ம ப்ரம்மன்னூஹ்யம் விபஸ்சிதா.

(இ-ள்.) எவர்கள் பஸ்மதாரியைக்கண்டு தங்கள் தலைகளில், மார்புகளில், மனசுகளிலாவது அடித்துக்கொள்ளுகிறார்களோ, அவர்கள் பிராம்ஹணர்களாயிருந்தாலுஞ் சண்டாளனுக்குப் பிறந்தவர்களென்றாகிக்கத்தக்கது என்பதாம்.

8. ஏஷாம் க்ரோதோ பவேத் பஸ்மதாரணே தத்ப்ரமாணகே
தே மஹாபாதகைர்யுக்தா இதி ஸாஸ்த்ரஸ்ய நிஸ்சயః.

(இ-ள்.) எவர்களுக்குப் பஸ்மதாரணத்திலும், அதின் பிரமாணங்களான இந்தவுபநிஷத் வசனங்களிலுங் கோபமுண்டாகிறதோ,

அவர்கள் மஹாபாதகங்களுடன் கூடினவர்களென்பது சாஸ்திர நிச்சய மென்பதாம்.

9. த்ரிபுண்ட்ரம் யேவிநிந்தந்தி நிந்தந்தி சிவமேவதே
தாரயந்திசயே பக்த்யா தாரயந்தி சிவம்சதே.

(இ - ள்.) திரிபுண்டரத்தை யெவர்கள் நிந்திக்கிறார்களோ, அவர்கள் சிவனையே நிந்திக்கின்றவராவர். எவர்கள் பக்தியுடன் அதைத் தரித்துக் கொள்ளுகிறார்களோ, அவர்கள் சிவனையே தரித்துக் கொள்ளுகின்றவராவர் என்பதாம்.

10. திக்பஸ்ம ரஹிதம்பாலம் திக்கிராம மசிவாலயம்
திகனீசார்சனம் ஜன்ம திக்வித்யா மசிவாத்மிகாம்.

(இ-ள்.) பஸ்மமில்லாத நெற்றியைச்சுடு. சிவாலயமில்லாத கிராமத்தையுங் கொளுத்து. சிவபூஜையில்லாத ஜந்மத்தையுஞ்சுடு. சிவஸ்வரூபமில்லாத வித்தையையுஞ்சுடு. என்பதாம்.

11. ருத்ராக்னேர்யத்பரம் வீர்யம் யத்பஸ்ம பரிகீர்த்திதம்
தஸ்மாத்ஸர்வேஷு காலேஷு வீர்யவான் பஸ்மஸம்யுதః.

(இ-ள்.) உருத்திராக்கினியின் சிரேஷ்டமான வீரியமானது பஸ்மமென்று சொல்லப்பட்டது. ஆகையால், ஸர்வகாலங்களிலும் பஸ்மத்துடன் கூடினவனே வீரியமுள்ளவனாகின்றான் என்பதாம்.

12. பஸ்மநிஷ்டஸ்ய தஹ்யந்தே தோஷாபஸ்மாக்னி ஸங்கமாத்
பஸ்மஸ்னான விசுத்தாத்மா பஸ்மநிஷ்ட யிதிஸ்ம்ருதః.

(இ-ள்.) பஸ்மநிஷ்டையிலிருக்கிறவனுக்குப் பஸ்மாக்கினி சங்கமத்தால் ஸகலதோஷங்களுந் தகிக்கப்பட்டுப்போய்விடும். பஸ்மஸ்நானத்தால் விசுத்தாத்மா வானவனே பஸ்மநிஷ்டனென்று ஸ்மரிக்கப்பட்டான் என்றபடியாம்.

13. பஸ்ம ஸந்திக்த ஸர்வாங்கோ பஸ்மதீப்த த்ரிபுண்ட்ரகః
பஸ்ம சாயீச புருஷோ பார்மநிஷ்ட யிதிஸ்ம்ருதః.

(இ-ள்.) பஸ்மத்தாற் பூசப்பட்ட ஸர்வாங்க முள்ளவனும், பஸ்மத்தாற் பிரகாசிக்கின்ற திரிபுண்டரமுள்ளவனும், பஸ்மத்தில் சயனித்துக் கொண்டவனுமான புருஷனே பஸ்மநிஷ்டனென்று ஸ்மரிக்கப்பட்டான் என்றபடியாம்.

# ஸ்ரீ ஹரதத்தாசாரிய சுவாமிகள்

## சரித்திரத்தின் ஓர் பகுதி.

(39-வது பக்கத்தொடர்ச்சி.)

ஓர்நாள் அவர் வைசுதேவஞ்செய்து தமது கிருகத்துவாயிலி லே வந்து அதிதிகள் வருகின்றார்களா வென்று பார்க்குமிடத்து ஒரு சிவபக்தர் ஆங்குவந்தார். அவரை அழைத்துக்கொண்டு போய் அறுசுவையோடு போசனஞ்செய்வித்து, தாமும் போசனஞ் செய்து அவரோடு தாமும் தாம்பூலஞ் செய்துகொண்டிருக்குங் கால், அந்த அதிதிப்பிராமணர் ஆசாரியரைநோக்கி, சுவாமி, தங்களுக்கு க்ஷேத்திரமிருக்கின்றதா? தாங்கள் செய்யும் உபசாரம் ராஜோபசாரமாருயிக்கின்றதே! என்று கேட்ப, அதைக்கேட்ட ஆசாரியர் எனக்குள்ள க்ஷேத்திரம் உழப்படாததும், சலம்பாய்ச் சப்படாததும், தீர்வைகொடுக்கப்பெறாததும், இருபோகமின்றி ஒருபோக முடையதும், குளிர்ச்சியாகிய மூளையுடைய நதிப்பிர வாக முடையதும், எப்பொழுதும் உபாதியின்றி போகமுடைய தாயுமுள்ள க்ஷேத்திரமேயாம். என்று—

அங்யேவநக்ஷேத்ரமர்கிஷ்டபச்யமநர்க்கபாகத்விதீயோபபங்நம்
ஊஷ்பௌஷதேசாம்குராமுங்நதீகமத்யத்ஸதாபோகமுபாதிசூங்யம்.

என்னும் இந்தசுலோகத்தைச்சொல்லக்கேட்டபிராமணர் ஆச்சரிய மடைந்து, பின்னரும் அநேக சிவகதைகளை ஆசாரியர்வாயிலாகக் கேட்டு, நாம் கிருதார்த்தராயினோம் என்று சந்தோஷத்தோடு விடைபெற்றுக்கொண்டு தம் வீடு சார்ந்தார்.

அரதத்தாசாரியர் ஓர்நாள் சிவத்தியான பராயணராய் பிரம யஞ்ஞத்தின் பொருட்டுக் காவேரி தீர்த்தத்துக்குப் போயிருந்தார். அப்போது ஆங்குவந்த சண்டாளன் சண்டாளி என்னும் இருவ ருள்ளே சண்டாளியானவள் காவேரியைப் பரிசிக்கும்பொருட்டுப் போக, புருஷன் அவளைநோக்கிக் காவேரிசலத்தைத் தொடாதே என்றான். அதைக்கேட்ட நாயகி ஸ்நானஞ்செய்தலினாலும் தரிசித் தலினாலும் காவேரி மகாபாபங்களை யெல்லாம் போக்குகின்றா ளென்று சொல்லப்படுகின்றதே, பிராணநாயகரே! இங்ஙனம் நீவிர்சொல்லி என்னைத் தடுக்கவேண்டியது என்னை என்றாள். அத ற்கு அவன் அவளை நோக்கிக் காவேரி தீரத்திலே எவ்வளவு மணலுண்டோ அவ்வளவுஞ் சிவலிங்கரூபமாம். நாம்கையினாலே பரிசிக் கப்படாது என்றான். இந்த வார்த்தையைக்கேட்ட ஆசாரியர் சமீ பத்திலே நின்று அச்சண்டாளனுடைய பாதத்திலே விழ்ந்து வண

ங்கி, அவன் கழற்றிவிட்ட செருப்பைத் தமது தலையிலேவைத்து, ஆனந்தக்கூத்தாடி, உலகத்திலே சிலர் ஞானத்தை அவலம்பனஞ் செய்கின்றார், வேறு சிலர் கன்மத்தை அவலம்பிக்கின்றார், நாமோ சிவபக்தருடைய பாதரக்ஷையை அவலம்பிக்கின்றோம்,—

ஞாநாவலம்பிநகேசித்கேசித்கர்மாவலம்பிநః
வயந்துசிவபக்தாநாம்பாதரக்ஷாவலம்பிநః.

என்னுங் கருத்தையுடைய இந்த சுலோகஞ்சொல்லிச் சமஸ்தப்பிராணிகளையும் சிவசொரூபமாகப் பாவித்து வருவாராயினர்.

ஓர்நாள் இவருக்குப் பாகஞ்செய்யப்பட்ட சாலையினுள்ளே நாயொன்று பிரவேசித்து அன்னத்தை உண்ண, அதைக்கண்ட அரதத்தாசாரியர் சிவபிரானே நாய்ரூபமாய் வந்துண்டாரென்று நினைந்து, அதனால் அதனைச் சிவநின்மாலியமாய்க்கொண்டு சிவத்தியானத்தோடு பந்துக்களுடன் அதனைப் புசித்தார்.

மற்றோர்நாள் அரதத்தாசாரியர் அப்பியங்கஸ்நானஞ் செய்துவிட்டுக் காவேரிக்குப் போயினர். மடிசஞ்சி பாத்திரமுதலியன எடுத்துக்கொண்டு போகும்போது சிவபிரான் ஓர் விருத்த சண்டாளனாய்க் கோலையூன்றிக்கொண்டு தீனவார்த்தைபேசி அவரைச் சமீபித்து, நாதரே! தாகத்துக்குச் சலமில்லை! பசி என்னை வாட்டுகின்றது. அதற்கொரு வழிகாட்டல் வேண்டுமென்று கேட்ப, உடனே அவர் தமது கிருகத்துக்கு வந்து வடித்தகஞ்சி கொண்டு வந்து அவருக்கு வார்த்துவிட, அவரும் அதைக் குடித்துப் பசி தீர்ந்தார்.

---

## தென் ஆப்பிரிக்கா ஆயுள் சந்தாதாரர்கள்.

தென் ஆப்பிரிக்கா புலாவேயோவிலிருக்கும் ஸ்ரீமான் - க. கிருஷ்ணபடையாட்சியவர்களும் முதலி அண்டு நாயுடு அவர்களும் ஆயுள் சந்தாதாரர்களாய்ச் சேர்ந்து 3 பவுன் அனுப்பினர்கள்.

---

### சந்தாதாரர்கள்.

நமது சந்தாதாரர்கள் ஒவ்வொருவரும் சிறிது முயற்சி செய்தால் இப்பத்திரிகை ஆயிரக்கணக்காய்ப் பரவும். இதை நாம் பலமுறை பலவாறாக விளக்கியும் நமது நேயர்கள் கவனியாமலிருப்பது சைவ சமயத்தின் துர்ப்பாக்கியம் போலும்.